


**06. 09. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. இந்தியாவும் - அமெரிக்காவும் ஆக்கப்பூர்வமான நட்பு நாடுகளாக திகழ்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் கட்சியின் தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

3. தமிழ்நாடு காவலர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. அஇஅதிமுகவின் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் திரு.கே.ஏ. செங்கோட்டையனை நீக்கி, கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி இன்று உத்தரவிட்டுள்ளார்.

5. ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி சூப்பர் 4 பிரிவில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**************

<u>பிரதமர் - ட்ரம்ப்</u>

இந்தியாவும் - அமெரிக்காவும் எதிர்காலத்தை உள்ளடக்கிய ஆக்கப்பூர்வமான நட்பு நாடுகளாக திகழ்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் பிரதமர் வெளியிட்ட செய்தியில் இந்தியாவுடனான நல்லுறவு தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பின் உணர்வுகளையும், மதிப்புகளையும் பாராட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

விரிவான சர்வதேச பாதுகாப்பு ஒத்துழைப்பை நேர்மறையுடன் இருநாடுகளும் எதிர்நோக்கி உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பஞ்சாப், ஹிமாச்சல பிரதேச மாநிலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பிரதமர் இன்று நேரில் பார்வையிடுகிறார்.

கன மழை காரணமாக பஞ்சாப் மாநிலத்தில் குர்தாஸ்பூர், ஃபெரோஸ்பூர், அம்ரித்ஸர் உள்ளிட்ட 22 மாவட்டங்களை சேர்ந்த ஆயிரத்து 948 கிராமங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் மீட்பு நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**************

<u>நட்டா</u>

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் கட்சியின் தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

குடியரசு துணை தலைவர் தேர்தலில் வாக்களிப்பு நடைமுறைகள் குறித்து இதில் ஆலோசிக்கப்படும்.

வரும் செவ்வாய்கிழமை நடைபெறும் குடியரசு துணை தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக பிஜேபியின் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனும்,

**I.N.D.I** கூட்டணி வேட்பாளராக முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டியும் போட்டியிடும் நிலையில் இந்த கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

**************

<u>ஜிதன்ராம் மான்ஜி</u>

உலக பிரசித்திபெற்ற பித்ரு பக்ஷ மகா சங்கமம் 2025-ஐ மத்திய சிறு குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு.ஜிதன்ராம் மான்ஜி பீஹார் கயாவில் இன்று தொடங்கிவைக்கிறார்.

வரும் 21ஆம் தேதிவரை நடைபெறும் இந்நிகழ்விற்காக 17 சிறப்பு மண்டலங்கள் உருவாக்கப்பட்டு பாதுகாப்பு, போக்குவரத்து மேலாண்மை, உள்ளிட்ட விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியா மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் தங்களது மறைந்த முன்னோர்களுக்கு கங்கை ஆற்றங்கரையில் திதி கொடுக்கும் நிலையில் ஒரே நேரத்தில் 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் பேர் அமர்ந்து தர்ப்பணம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

**************

<u>அமர்ப்ரீத் சிங்</u>

தேசத்திற்கான தன்னலமற்ற சேவையை வழங்க ராணுவ அதிகாரிகள் திறம்பட செயலாற்ற வேண்டும் என விமான படை தளபதி ஏர்.சீப் மார்ஷல் அமர்ப்ரீத் சிங் தெரிவித்துள்ளார்.

சென்னை ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் பயிற்சி நிறைவு அணிவகுப்பு மரியாதையை இன்று ஏற்றுக்கொண்ட அவர், நாட்டின் பாதுகாப்பை ராணுவத்தினர் உறுதி செய்வதாக பெருமிதம் தெரிவித்தார்.

25 பெண் அதிகாரிகள் உட்பட பயிற்சி நிறைவு செய்த 130 அதிகாரிகள் இந்திய ராணுவத்தில் பல்வேறு பிரிவுகளில் தங்களது பணியினை தொடர உள்ளனர்.

இந்தியாவின் 9 நட்பு நாடுகளை சேர்ந்த இருபாலரும் பயிற்சி நிறைவு செய்தது குறிப்பிடத்தக்கது.

**************

முதலமைச்சர்

ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளில் தமது அரசு முறை பயணத்தின் மூலம் இதுவரை 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதன்மூலம் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்படும் என்றார்.

மின்சார வாகன உற்பத்தியில் ஐந்தாயிரம் கோடி ரூபாய் முதலீடு மற்றும் இங்கிலாந்தின் அஸ்ட்ரா ஜெனிகா நிறுவனத்தின் சென்னை தொழில்நுட்ப மையத்தில் 3ஆம் கட்ட விரிவாக்க பணிகளுக்கான ஒப்பந்தங்கள் முதலமைச்சர் முன்னிலையில் இன்று கையெழுத்தாகின.

முன்னதாக லண்டனில் அம்பேத்கார் இல்லத்தை பார்வையிட்ட முதலமைச்சர், மாமேதை கார்ல்மார்க்ஸ் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.

**************

காவலர் தினம்

தமிழ்நாடு காவலர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1859-ம் ஆண்டு மெட்ராஸ் மாவட்ட காவல் சட்டம் இயற்றப்பட்டதை நினைவு கூறும் வகையில், காவல்துறை சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

காஞ்சிபுரம் மாவட்ட ஆயுதபடை பயிற்சி மைதானத்தில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சண்முகம் தலைமையில் காவலர் தின உறுதிமொழி ஏற்கப்பட்டது.

மேலும் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக காவல்துறை பயன்படுத்தும் பாதுகாப்பு உபகரணங்கள் காட்சிபடுத்தப்பட்டன.

திருப்பூர் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் இந்நாளை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் பணியின் போது உயிர் நீத்த காவலர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

காவலர் தினத்தை ஒட்டி உதகையில் இன்று ஆயுத கண்காட்சி நடைபெற்றது.

காவல்துறையில் பழங்காலங்களில் பயன்படுத்தப்பட்ட கத்தார்கள், வாள்வகைகள், வளரி, துப்பாக்கி தோட்டாக்கள் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்களை பள்ளி மாணாக்கர் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்த கண்காட்சி தங்களுக்கு பெரிதும் ஊக்கமளிப்பதாக பள்ளி மாணவி தெரிவிக்கையில்:

வாய்ஸ்

**************

<u>செங்கோட்டையன்</u>

அஇஅதிமுகவின் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் முன்னாள் அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையனை நீக்கி, கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி இன்று உத்தரவிட்டுள்ளார்.

கட்சியிலிருந்து நீக்கப்பட்ட தலைவர்களை மீண்டும் ஒன்றிணைக்க வேண்டும் என கோபிசெட்டி பாளையம் சட்டப்பேரவை உறுப்பினரான அஇஅதிமுகவின் திரு.செங்கோட்டையன் காலக்கெடு விதித்த நிலையில்,

அவர் வகித்து வந்த அமைப்புச்செயலாளர் மற்றும் ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் பதவியிலிருந்தும் விலக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**************

<u>தர்மபுரி ஒத்திகை</u>

தர்மபுரி மாவட்டம் தொப்பையாற்றில் வடகிழக்கு பருவமழை மீட்பு ஒத்திகை நிகழ்ச்சி ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் தலைமையில் இன்று நடைபெற்றதாக மாவட்ட தீயணைப்பு அலுவலர் செல்வி அம்பிகா தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

**************

<u>பழனி</u>

சந்திரகிரகணத்தை ஒட்டி பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் நாளை இரவு 7 மணிவரை மட்டுமே பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**************

<u>இருவரி</u>

தமிழகத்தில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மருத்துவ படிப்புகளுக்கான கலந்தாய்வு நாளை மறுநாள் தொடங்குகிறது.

இதற்கான தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில் அரசு மற்றும் சுயநிதி கல்லூரிகளில் 4 ஆயிரத்து 231 இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பபட உள்ளன.

மதுரை தமுக்கம் மைதானத்தில் புத்தக திருவிழா வரும் 15ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

கலை அறிவியல், இலக்கியம், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் காட்சி மற்றும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் மாணாக்கர் இதனை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.பிரவீன் குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாகை மாவட்டம் வேதாரண்யம், விழுந்தமாவடி ஆகிய இடங்களில் சுனாமி பேரிடர் ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

தீயணைப்பு, காவல், மீன்வளம், பொதுப்பணிதுறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் இதில் பங்கேற்றனர்.

தூத்துக்குடி மாவட்டம் திட்டங்குளம் தொழிற்பேட்டையில் தீப்பெட்டி ஆலையில் இன்று நேரிட்ட தீ விபத்தில் பல லட்ச ரூபாய் மதிப்பிலான இயந்திரங்கள் மற்றும் மூலப்பொருட்கள் சேதமடைந்தன.

விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

காரைக்கால் துறைமுகம் சார்பில் வீடு தேடி மருத்துவ சிகிச்சை வழங்கும் நடமாடும் மருத்துவ வாகன சேவை இன்று தொடங்கியது.

இதன்மூலம் 20-க்கும் மேற்பட்ட தொலை தூர கிராம மக்கள் பயன்பெறுவர்.

நாக்பூர் தீக்ஷாபூமியில் விஜயதசமி அன்று நடைபெறும் தர்ம சக்ர பரிவர்த்தன திருவிழாவிற்கு புனித பயணம் மேற்கொள்ளும் ராணிப்பேட்டை மாவட்டத்தை சேர்ந்த பௌத்த நபர்கள் தமிழக அரசின் மானியம் பெற இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் டாக்டர் சந்திரகலா தெரிவித்துள்ளார்.

**************

<u>ரயில்</u>

ராமநாதபுரம் - கர்நாடக மாநிலம் ஹூப்ளி இடையேயான வாராந்திர சிறப்பு ரயில் சேவை இருமார்கங்களிலும் இம்மாத இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

ராமநாதபுரத்திலிருந்து நாளைமுதல் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 10 மணிக்கு புறப்படும் இந்த ரயில் அடுத்த நாள் இரவு 7.40க்கு ஹூப்ளி சென்றடையும்.

திருச்சி, கரூர், நாமக்கல், சேலம், தர்மபுரி ரயில் நிலையங்களில் இந்த ரயில் நின்று செல்லும்.

**************

<u>அணை</u>

கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுவதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு **43** ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 120 அடியாக நீடிக்கும் நிலையில் அணைக்கு வரும் 30 ஆயிரத்து 800 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது.

இதனிடையே கிருஷ்ணகிரி மாவட்டம் கே.ஆர்.பி. அணையிலிருந்து 937 கன அடி நீர் வெளியேற்றப்படுவதால், தென்பெண்ணை ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**************

<u>வானிலை</u>

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தஞ்சை திருவாரூர் நாகை மயிலாடுதுறை புதுக்கோட்டை கடலூர் அரியலூர் மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**************

<u>ஹாக்கி</u>

பீகார் ராஜ்கிரில் நடைபெறும் ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி சூப்பர் 4 பிரிவில் இந்தியா இன்றிரவு ஏழரை மணிக்கு சீனாவை எதிர்கொள்கிறது.

சூப்பர் 4 சுற்றில் புள்ளிகள் பட்டியலில் இந்தியா 4 புள்ளிகளுடன் முதல் இடத்திலும்,

3 புள்ளிகளுடன் சீனா 2ஆம் இடத்திலும் உள்ளது.

**************

<u>டென்னிஸ்</u>

**U.S.** ஓப்பன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இன்று நள்ளிரவு நடப்பு சேம்பியன் பெலாரசின் சபலென்கா – அமெரிக்காவின் **Amanda Anisimova-**வை எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் இறுதி போட்டியில் நாளை இத்தாலியின் **Jannik Sinner -** ஸ்பெய்னின் **Carlos Alcaraz-**ஐ எதிர்கொள்கிறார்.

இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் **Sinner-** கனடாவின் ஃபெலிக்ஸை 6-1 3-6 6-3 6-4 என்ற செட்களில் வென்று இறுதி போட்டிக்கு முன்னேறினார்.

**************